## *10*

# விசுவாசத்தின் ஞானம் (3:13-18)

*மனித அறிவு விரிவடைந்து கொண்டிருக்கும் புலன் உணர்வு வேகத்தைப் பற்றி நினைத்துப் பாருங்கள்! இதுவரையில் வாழ்ந்துள்ள அறிவியல் அறிஞர்களில் 90 சதவிகிதம் பேர் இன்றைய நாட்களில் வாழ்ந்துகொண்டுள்ளனர் என்றும் உலகத்தின் அறிவு அமைப்பானது ஒவ்வொரு பத்து ஆண்டுகளிலும் இருமடங்கு ஆவதாகவும் மதிப்பிடப் பட்டுள்ளது. நீங்கள் சற்றே நின்று உங்கள் வாழ்வில் கொண்டுள்ள முன்னேற்றங்களைப் பற்றி நினைத்துப் பார்த்தால் அறிவினுடைய முன்னேற்றத்தின் அதிவேக விகிதம் தெளிவாகத் தெரியும். உண்மையில், சில அறிவியல் அறிஞர்கள், ஆராய்ச்சி செய்து குவிக்கப்பட்டுள்ள அறிவைச் சேமித்து வைப்பதற்கு, அதிகம் மேன்மையான வழிகளை ஆராய்வதற்காகத் தங்கள் வாழ்நாளையே செலவிடுகின்றனர்.*

*இப்படிப்பட்ட அறிவுக் குவிப்பானது, மனிதன் மிகவும் ஞானமுள்ளவனாக இருப்பதாக நம்பும்படி அவனை வழிநடத்துகிறது. ஞானத்தின் இந்த உணர்வானது மனிதனை முரட்டுத்தனமும் மேட்டிமையும் கொண்டவனாக ஆக்குகிறது. ஞானத்தின் இந்த உணர்வில் இருந்து, உலகளாவிய அணு உட்கரு ஆயுதப் போட்டி, தொழில்ரீதியான பொறாமைகள், விரோதம் மற்றும் தனிப்பட்ட வகையிலான மனதிருப்தியின்மை ஆகியவை எல்லா இடங்களிலும் வந்துள்ளன. நாம், படைத்தவரைச் சேவிப்பதற்கு மாறாகப் படைக்கப்பட்ட உலகத்தைச் சேவிக்கும்படி தூண்டப்பட்டுள்ளோம், இது மனித அறிவித்தல் மற்றும் அவனது சொந்த அறிவைச் சேவித்தல் என்ற தவிர்க்க இயலாத முடிவாக இருப்பதாகக் காணப்படுகிறது (ரோமர் 1:21, 22).*

*"அறிவு" மற்றும் "ஞானம்" என்பவை ஒரே விஷயமல்ல என்பது உண்மை யாக உள்ளது. அறிவு என்பது உண்மைகளின் குவிப்பாக இருக்கும் வேளையில், ஞானம் என்பது நாம் கொண்டுள்ள அறிவைப்* பயன்படுத்தும் *திறன் என்பதாக உள்ளது. நமது அறிவானது நமது ஞானத்தை விஞ்சியுள்ளது என்பது நாம் கொண்டுள்ள பிரதான பிரச்சனைகளில் ஒன்றாகக் காணப்படும். தகவல் தொடர்பு, ஆயுதங்கள் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றை நாம் வேறு எவ்வாறு விளக்கப்படுத்த முடியும்? பல ஆண்டுகளாக நாம் - ஒரு அறிவியல் மேதை தனது சொந்த வாழ்வை மேலாண்மை செய்யக்கூடாதவராக இருத்தல் என்ற - இந்தப் பிரச்சனையைப் பற்றித் தனிப்பட்ட மட்டத்தில் சிரித்துக் கொண்டு இருந்திருக்கிறோம்.*

*ஆனால் இப்பொழுது யாக்கோபு, ஒரு புதிய சிந்தனையுடன் நம்மை எதிர் கொள்கிறார். ஞானம் மற்றும் அறிவு ஆகியவற்றிற்கு இடையில் ஒரு வேறுபாடு இருப்பது மாத்திரமல்ல, ஆனால் ஞானத்திலேயே இரு வகைகள் உள்ளன. யாக்கோபு, பரத்திலிருந்து வருகிற ஞானத்தை (விசுவாசத்தின் ஞானத்தை)ப் பற்றியும் கீழிருந்து வருகிற ஞானத்தைப் பற்றியும் பேசுகிறார். நமது வேதவசனப் பகுதியான யாக்கோபு 3:13-18ல் யாக்கோபு இவ்விரண்டிற்கும் இடையிலான வேறுபாட்டு ஒப்பீடு ஒன்றை அளிக்கிறார். வேறுபாட்டு ஒப்பீட்டை அளித்தல்*

என்பது ஏவுதல் பெற்ற எழுத்தாளர்களின் பொதுவான வழக்கமாக உள்ளது: முதலாம் சங்கீதமானது தேவபக்தியுள்ள வாழ்வையும் தேவபக்தியற்ற வாழ்வையும் வேறுபடுத்தி ஒப்பிடுகிறது. மாம்சத்தின் செயல்களையும் ஆவியின் கனிகளையும் பவுல் வேறுபடுத்தி ஒப்பிட்டார். இயேசு, குறுகலான மற்றும் விசாலமான வாசல்களை, மணல்மீது அஸ்திபாரம் இடப்பட்டுக் கட்டப்பட்ட வீட்டையும் கன்மலையின் மீது கட்டப்பட்ட வீட்டையும் வேறுபடுத்தி ஒப்பிட்டார். இந்த வேறுபடுத்தி ஒப்பிடுதல் யாவையும் வாழ்விற்குள்ள இரு திசைகள் பற்றி அக்கறை கொள்கின்றன என்பது தெளிவு. ஆனால் யாக்கோபு, சரியான திசையைத் தேர்ந்து கொண்டிருந்து ஆனால் அந்த வாழ்வில் தவறான ஞானத்தைக் காட்சிப்படுத்திக் கொண்டுள்ள மக்களைப் பற்றிப் பேசுகிறார்.

## ஞானமுள்ள மனிதர் (3:13)

“உங்களில் ஞானியும் விவேகியுமாயிருக்கிறவன் எவனோ? ...” என்று யாக்கோபு கேட்கும் கேள்வி, நாம் யாவரும் பதில் அளிக்கக்கூடிய ஒன்றாக உள்ளது (யாக்கோபு 3:13அ). தேவனுடைய சபைக்குழுமம் ஒவ்வொன்றிலும், தேவையின் வேளையில் மக்கள் சென்று ஆலோசனை கேட்கக்கூடிய ஒரு மனிதர் இருப்பதாகக் காணப்படுகிறது. அவர் அறிவுமிகுந்தவராக இருந்தாலும், அவரது மாபெரும் அறிவின் காரணமாக அல்ல ஆனால் அவரது ஞானம் மற்றும் புரிந்துகொள்ளுதல் ஆகியவற்றின் காரணமாகவே, அவரிடத்தில் அவர்கள் ஆலோசனை கேட்க வருகின்றனர். இது பதிலளிக்கப்பட முடியும் என்று யாக்கோபு அறிந்துள்ளதால், அவர் இந்தக் கேள்வியைக் கேட்கிறார். அர்க்கன்ஸாஸில் ஸ்பிரிங்டேல் என்ற இடத்தில் நான் ஆராதித்து வந்த சபையானது, சுமார் பன்னிரெண்டு ஆண்டுகள் காலத்தில், ஆறு இளைஞர்களை முழு நேர ஊழியக்காரர்கள் ஆக்க உதவிற்று. எனது கருத்தின்படி, பொறாமைப் படக்கூடிய அந்த சாதனைக்கு - ஜேம்ஸ் L. நீல் என்ற - ஒரு தனி மனிதர் மிகவும் பொறுப்பாளியாக இருந்தார். சகோதரர் நீல், ஏறக்குறைய அறுபது ஆண்டுகள் அளவாக, இந்த சபைக்குழுமத்தில் மூப்பராகப் பணிசெய்தார். அவர், இளைஞர்கள் வேதவசனங்களை மனப்பாடம் செய்ய வைத்தார். ஜெபங்களில் வழிநடத்தவும், பக்தியூட்டும் பேச்சுகளைப் பேசவும் மற்றும் அவர், அவர்களை இன்னும் பலவழிகளில் ஊக்குவித்தார். மக்களின் தலைமுறையினர், ஞானம் மற்றும் புரிந்துகொள்ளுதல் ஆகியவற்றிற்காக அவரைக் கண்ணோக்கினர்.

ஞானமும் புரிந்துகொள்ளுதலும் உள்ள மனிதரின் அடையாளக்குறியாக இருப்பது, “அவரது நல் நடத்தை” மற்றும் “ஞானத்திற்குரிய சாந்தம்” ஆகியவையே (3:13ஆ). வேறு வார்த்தைகளில் கூறுவது என்றால் பரத்தி லிருந்து வருகிற ஞானத்துடன் இருக்கும் மனிதர், தமது ஞானத்தைப் பற்றி உங்களிடம் கூறமாட்டார், ஆனால் அவர் பேசுகிற, உற்றுக்கவனிக்கிற மற்றும் புரிந்துகொள்ளுகிற வகையில் அந்த ஞானம் காண்பிக்கப்படும், ஜிம்மி ஸ்டீவர்ட் என்பவர் நடித்த, *அது ஒரு ஆச்சரியம் நிறைந்த வாழ்வு* என்பது எல்லாக்காலங்களிலும் மிகவும் விரும்பத்தக்கதான கிறிஸ்துமஸ் படங்களில் ஒன்றாக உள்ளது. அது, ஒன்றுமற்ற வகையிலான ஒரு மனிதர், ஒன்றுமற்ற வகையிலான ஒரு நகரத்தில், ஒன்றுமற்ற வகையிலான ஒரு வியாபாரத்தைச் செய்துகொண்டு *முக்கியமானவராகலாம்* என்று ஏங்குதல் பற்றிய கதையாக உள்ளது. விட்டுச்சென்று, முக்கியமான ஒருவராக இருக்க அவர் வாய்ப்புப்

பெற்ற ஒவ்வொருமுறையும், யாரேனும் ஒருவருக்கு அவர் தேவைப்படுகிறார். தேவைகள் ஒருக்காலும் பூமியை அசைப்பதாக இருப்பதில்லை, ஆனால் அவைகள் அவர் செய்யக்கூடிய வகையிலான விஷயங்களாக இருக்கின்றன. திரைப்படம் ஓடுகையில், ஒவ்வொருவரும் முக்கியமானவர்கள் ஆகின்றனர், ஆனால் அந்த மனிதர் அவ்வாறு ஆவதில்லை. அவர் தம்மால் செய்ய முடிந்த சிறிய விஷயங்களைச் செய்துகொண்டு பின்னாலேயே தங்கியிருக்கிறார், தமது வாழ்வு முற்றிலும் தகுதியற்றதாக உள்ளதென்று தனக்குத்தானே இணக்கமாகக் கூறிக்கொள்கிறார். அவர் தற்கொலைக்கு முயற்சி செய்கையில், அம்மனிதர் இல்லாத நிலையில் சமூகம் எதைப்போன்று இருக்கும் என்று அவருக்குக் காண்பிக்க, ஒரு தூதன் தோன்றுகிறார். கவனிக்கப்படாத அந்த அன்பின் செயல்கள், முழு சமூகத்தையும் உண்மையில் எவ்வாறு மாற்றி புரட்சி செய்திருந்தன என்பது வரைகலை விவரிப்புகள் மூலமாகத் தெளிவாக்கப்படுகிறது. கவனிக்கப்படாததாக இருப்பினும் ஒரு நபருடைய வாழ்வு, மற்ற பலருடைய வாழ்வில் எவ்வளவு நேர்மறையான செல்வாக்கைக் கொண்டிருக்க முடியும்! அதைப் போன்ற விஷயத்தைத்தான் யாக்கோபு இங்கு பேசுகிறார். யாக்கோபு தமது நடைமுறை வகையான வழியில், நாம் நமது அன்றாட வாழ்வில் விசுவாசத்தின் ஞானத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று பரிந்துரைக்கிறார்.

## உலக ஞானம் (3:14-16)

யாக்கோபு, உலக ஞானத்தைக் காட்சிப்படுத்துகிற “சகோதரர்களைக்” குறித்துக் கவலையாக இருக்கிறார் என்று ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ளது. யாரேனும் ஒருவர், “உலகஞானத்தை யாரேனும் ஒருவர் காட்சிப்படுத்துகிறார் என்று நீங்கள் எவ்வாறு கூறமுடியும்?” என்று கேட்கலாம். யாக்கோபு, “உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும் விரோதத்தையும் வைத்தீர்களானால், ...” என்று கூறுகிறார் (3:14). சத்தியத்தின் அறுவைச் சிகிச்சைக் கத்தியினால் யாக்கோபு, விஷயத்தின் இருதயம் போன்ற மையப்பகுதியைச் சரியாகப் பிளக்கிறார். உலகஞானமானது தன்னையே காட்சிப்படுத்துகிறது. விரோதமும் பேராசையும், தேவனுக்கு அர்ப்பணித்த வாழ்வின் கனியாக இருப்பதில்லை. உண்மையில் அவைகள் பூமிக்குரியவைகள், வேதவசனத்தின் படியில்லாதவைகள் மற்றும் பிசாசுக்கடுத்தவைகள் என்று விவரிக்கப்படுகின்றன. மேலும் அவர், நொறுங்கிய இருதயமும் நறுங்கின ஆவியுமே, தேவபக்தியற்ற இந்த எண்ணப்போக்குகளைத் துரத்தக்கூடிய ஒரே வழியாக நமக்கு உள்ளது என்றும் கூறுகிறார். பழைய நொண்டிச் சாக்குகளைத் தேவன் ஏற்றுக்கொள்ள மாட்டார். நாம், “நான் இருக்கும் வகைமாத்திரமே இவ்வாறு உள்ளது; நீங்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் அல்லது அதை விட்டு விடுங்கள்” என்றோ அல்லது “நான் உண்மையில் முரடனாகவோ அல்லது இடர்ப்பாடுள்ளவனாகவோ இருப்பதில்லை; நான் ஒளிவு மறைவற்றவனாக மற்றும் எளிமையாகப் பேசுபவனாக மாத்திரம் இருக்கிறேன்” என்றோ கூறினால், அவர் கவனிக்க மாட்டார். நமது வாழ்வில் உள்ள தவறுகளை நாம் அறிக்கையிடக் கற்றுக்கொள்ளாத வரையிலும், நாம் உலக ஞானத்தினால் தொடர்ந்து தவறாகக் கையாளப்படுபவர்களாகவே இருப்போம். தேவனுடைய ஞானம் கிரியை செய்யும்போது, தாழ்மை உணர்வும் தேவன் மகிமைப்படுத்தப்படுதலைக் காண்பதற்கான விருப்பமும் மேலோங்குகிறது.

உலகஞானமானது பரிதாபமான விளைவுகளுக்கு வழிநடத்துகிறது: "வைராக்கியமும் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச் செய்கைகளுமுண்டு" (3:16). உலகஞானமானது, மக்களை ஒன்றுகூட்டிக் கொண்டுவருவதற்குப் பதிலாக, மக்களைப் பிரித்து விரட்டுகிறது. பல ஆண்டுகளாக, மனித இனமானது, மனித மனதின் வலிவார்ந்த தன்மையை நிரூபித்துள்ளது. தொழில் நுட்பம், ஆராய்ச்சி முதலியவற்றின் மூலமாக, மனித இனம் அதிக அறிவுக் கூர்மையடையத் தொடர முடியும் என்று நம்புவது எவ்வளவு சுலபமாக உள்ளது! பூமிக்குரிய அறிவு மற்றும் ஞானம் ஆகியவற்றைக் காட்டிலும் அதிகமான விஷயங்கள் தேவைப்படுகின்றன என்று நாம் நம்பி இணங்க, உலகத்தின் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நிலைகளைத் தற்செயலாகப் பார்த்தலே போதுமானது. பூமிக்குரிய ஞானத்திற்கு ஒரு மாற்று நமக்கு கிடைக்கிறது என்பது ஒரு மகிழ்ச்சிக்குரிய விஷயமாக உள்ளது.

## விசுவாசத்தின் ஞானம் (3:17, 18)

மேலான ஞானமானது தேவனிடத்தில் இருந்து வருகிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. தேவன் ஞானத்தைக் கொடுக்கிறார் (யாக்கோபு 1:5), நாம் அதைத் தாழ்மையுடனும் நன்றி உணர்வுடனும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று யாக்கோபு ஏற்கனவே கூறியிருக்கிறார்.

பரத்தில் இருந்து வரும் ஞானத்தை நாம் உணர்ந்தறிவதற்காக, அதை யாக்கோபு ஏழு பண்புகளுடன் சித்தரிக்கிறார்.

*தூய்மை.* நாம் சேவிக்கிற தேவன் "தூய்மையான" தேவனாக இருக்கிறார், மற்றும் அவர் தருகிற ஞானமானது துன்மார்க்கத்துடன் கலக்கப்படாததாக உள்ளது. விசுவாசத்தின் ஞானத்துடன் இருக்கும் தனிநபர், சுய ஆர்வம் மற்றும் சுய பேராவல் ஆகியவற்றில் இருந்து விடுதலையானவராக இருக்கிறார். தூய்மை யான நபருடைய நடத்தைக்குப் பின்னால் அநீதியான எந்த நோக்கங்களும் பதுங்கி இருப்பதில்லை.

*சமாதானத்தை நேசித்தல்.* விசுவாசத்தின் ஞானமானது, தனிநபர்களை ஒருவர் மற்றவருடன் நெருக்கமாக்குவதால், அது சரியான உறவுமுறைகளை உண்டாக்குகிற ஞானமாக உள்ளது. விசுவாசத்தின் ஞானமானது, ஒருவர் அன்புகூரும் இருதயத்தையும் சமாதானமான நிலைப்பாட்டையும் கொண்டிருக்கக் காரணமாகிறது. தேவனிடத்தில் இருந்து வருகிற ஞானமானது, தனிநபர்களை "சண்டை இட்டுக்கொள்ளவோ" அல்லது தேவையற்ற விவாதங்களில் மகிழ்ச்சியடையவோ அனுமதிக்காது.

*சாந்தம்.* இவ்வார்த்தையானது கடினமானதாக உள்ளது, ஏனெனில் கிரேக்க மொழியில் உள்ள வார்த்தைக்கு இணையான ஆங்கில வார்த்தை இதற்கு இல்லை. கார்ல் சான்ட்பர்க் என்பவர் ஒருமுறை, ஆபிரகாம் லிங்கனை "வெல் வெட் இரும்பு" என்று விவரித்தார். அதுவே "சாந்தம்" என்ற சொற்றொடர் அர்த்தப்படுத்தும் விஷயத்திற்கு அனேகமாக ஒரு நல்ல விவரிப்பாக இருக்கலாம். விபசாரத்தில் பிடிபட்ட பெண்ணை இயேசு கண்ணோக்கியபோது (யோவான் 8) மற்றும் அவளுக்கு மன்னிப்பை வழங்கியபோது, அவர் காட்சிப்படுத்தியது இந்தப் பண்பாகவே இருக்கிறது.

*இணக்கம்.* ஒருவர் எல்லா வகையான இணக்கத்தையும் குறிப்பிட முடிந்திருந்தும் யாக்கோபு எதை அர்த்தப்படுத்துகிறார் என்று

குறிப்பிடாதிருக்க முடியும். நாம் இந்த வார்த்தையை, இது பயன்படுத்தப்பட்ட கருத்தில் எடுத்துக்கொண்டால், இது உண்மையில் ஞானமுள்ள மனிதர் தேவனுக்குக் கீழ்ப்படிய எப்போதும் தயாராக இருக்கிறார் மற்றும் மனவிருப்பமாக இருக்கிறார் என்று அர்த்தப்படுகிறது.

*இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்திருத்தல்.* இவ்விரு சொற்றொடர்களும் ஒன்றாகச் செல்லுகின்றன மற்றும் இவைகள், 16ம் வசனத்தில் உள்ள "சகல துர்ச் செய்கைகளுக்கும்" நேர்மாறானது என்ற வகையில் கண்ணோக்கப்பட வேண்டும். "இரக்கம்" என்பதற்கான கிரேக்க வார்த்தை இடர்ப்பாட்டில் உள்ளவர்கள் மீது பரிவிரக்கம் என்று நேரடி அர்த்தப்படுகிறது மற்றும் இது "நற்கனி" என்ற வார்த்தையுடன் தொடர்புகொண்டுள்ளது, ஏனெனில் கிறிஸ்தவப் பரிவிரக்கம் என்பது ஒருக்காலும் வெறும் உணர்வாக மாத்திரம்இருப்பதில்லை. தேவையில் உள்ள நபருக்கு உதவி செய்யப்படும் வரையிலும், கிறிஸ்தவர் தேவையில் உள்ள அந்தத் தனிநபர்மீது பரிவிரக்கம் கொண்டுள்ளதாகக் கூற முடியாது.

*பட்சபாதம் இல்லாமை.* மீண்டுமாக இது மொழிபெயர்ப்பதற்கு ஒரு கடினமான வார்த்தையாக உள்ளது, ஏனென்றால் கிரேக்கப் புதிய ஏற்பாட்டில் இந்த ஒரு இடத்தில் மாத்திரமே இவ்வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. பெரும்பான்மையான விளக்கவுரைகள், "தீர்மானமான தன்மை" என்பது மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாக இருக்கலாம் என்று உய்த்துணருகின்றன. விசுவாசத்தின் ஞானமானது தனது இயல்பில் உறுதியானதாக உள்ளது மற்றும் இது நம்பிக்கை மற்றும் செயல் ஆகியவற்றில் சீர்பொருத்தமாக இருப்பதாகக் காண்பிக்கிறது.

*மாயமற்றது.* உண்மையான ஞானமானது நேர்மையானதாக உள்ளது மற்றும் அது தான் இல்லாத நிலையொன்றைக் கொண்டிருப்பதாக நடிப்ப தில்லை. மற்றவர்களுடனான நமது உறவில் நாம் நேர்மையானவர்களாக, நேர்மையின்மையின் சாயல் எதுவும் இல்லாதவர்களாக, மற்றும் உண்மை களை மறைத்தல் இல்லாதவர்களாக இருக்க வேண்டும். விசுவாசத்தின் ஞான மானது, நீங்கள் உங்கள் சொந்த ஆதாயத்திற்காக ஒரு பாகம் நடித்தல் என்பது ஒருக்காலும் கொண்டிருக்கத் தேவையில்லை என்று கூறுகிறது.

## முடிவுரை

நாம் சத்தியத்தை அறிவிக்கையில், நமது கிறிஸ்தவ வாழ்வின் ஆவியானது, இராஜ்யத்தின் வளர்ச்சிக்கு முக்கியமானதாக உள்ளது. அதுவே யாக்கோபு, "நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது" என்று கூறுவதற்குக் காரணமாக உள்ளது (3:18). நாம் வாழ்வது எப்படியோ, அப்படியே நாம் இருக்கிறோம், மற்றும் நாம் வாழ்வது எப்படியோ அதையே நாம் விதைக்கிறோம்.

எல்லாரும் ஒரு மேதையின் புத்திக்கூர்மையைக் கொண்டிருக்க இயலாது, ஆனால் யாக்கோபு விவரிக்கும் ஞானத்தை ஒவ்வொருவரும் கொண்டிருக்க முடியும். இவையாவையும் தேவனுடைய கொடைகளாக உள்ளன, இவை நாம் கேட்டுப் பெறவேண்டியவையாக உள்ளன.